குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், ஓமலூர்
எஸ்.டி.சி.எண்.18/2022

ம.சா. 2

2025-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29-ம் தேதி திங்கள் கிழமை மனுதாரர் தரப்பு சாட்சி 02-வது நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) செல்வி.இந்துமதி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோதை | தொழில் | |
| கணவர் பெயர் | சுடர்வாணன் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.32 மணி,

Complainant Sadhasivam present. Advocate Mr.Karunakaran present for Complainant. Accused Venkataramani present. Advocate Mr.C.Ranganathan present Advocate Mr.Rajaguru for Accused.

**முதல் விசாரணை தொடர்ச்சி:**

1) ஆஜர் எதிரி எனது வங்கியில் வங்கி கணக்கை பராமரித்து வருகிறார். எந்த தேதியில் ஆஜர் எதிரி காசோலைக்கு Stop Payment கொடுத்தார் என்றால் 08.01.2022 ம் தேதி ஆன்லைன் மூலம் கொடுத்தார். ஆஜர் எதிரி காசோலை எண் 915505 என்ற காசோலைக்கு மட்டும் தான் ஆன்லைன் மூலமாக Stop Payment கொடுத்தார். என்ன காரணத்திற்காக ஆஜர் எதிரி Stop Payment கொடுத்தார் என்ற விபரம் பற்றி தெரியவில்லை. ஆஜர் எதிரியின் ஆன்லைன் மூலம் கொடுக்கப்பட்ட Stop Payment க்கான ஆவணத்தை எடுத்து வந்துள்ளேன் **மேற்படி ஆவணம் ம.சா.ஆ-7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பொதுவாக ஒரு வங்கியில் கணக்கு வைத்திருப்பவர் யாருக்காவது காசோலையை கொடுத்த பிறகு கூட Stop Payment கொடுக்கலாம் என்றால் சரி.

2) மேற்படி காசோலையை வசூலுக்காக செலுத்திய விபரம் என்னுடைய வங்கிக்கு தெரியும். நான் எதிரியின் வங்கி கணக்கு எண் 40043424477 ல் 01.12.2021 முதல் 01.02.2022 வரையிலான வங்கி கணக்கு பரிவர்த்தனை பட்டியலை தாக்கல் செய்கிறேன். **அது ம.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ம.சா.ஆ.8 ஆவணத்தில் 24.01.2022 ம் தேதி ஆஜர் எதிரியின் அதிகபட்ச நிலுவைத் தொகை எவ்வளவு உள்ளது என்றால் ரூ.4,82,945.24/- ஆகும். மேற்படி 24.01.2022 ம் தேதியில் எவ்வளவு தொகையை எடுத்துள்ளார் என்றால் காசோலையின் மூலம் ரூ.4,00,000/- மும், ரூ.32,000/- மற்றும் ரூ.30,000/- ம் ஆன்லைன் பரிவர்த்தனை மூலம் செய்துள்ளார்.

3) காசோலையின் மூலம் ரூ.4,00,000/- பரிவர்த்தனை செய்யப்பட்டது என்ற சொல்லியுள்ள நிலையில் அதன் காசோலை எண் 915506 ஆகும். மேற்படி காசோலையின் மூலம் பணத்தை ஆஜர் எதிரி சுயமாக எடுத்துள்ளாரா அல்லது வேறு நபருக்கு கொடுத்தன் மூலம் எடுக்கப்பட்டுள்ளதா என்றால் ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

1) நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் தான் இந்த நீதிமன்றத்தில் சாட்சி அளிக்க வந்துள்ளேன் என்றால் சரி. மேற்படி அழைப்பாணையை இந்நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளேன். மேற்படி அழைப்பாணையில் என்ன காரணத்திற்காக சாட்சியம் அளிக்க வேண்டும் என்றும் என்ன ஆவணங்களை எடுத்துவர வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளதா என்றால் குறிப்பிட்டுள்ளது. ஆஜர் எதிரி Stop Payment செய்ததற்கான ஆவணத்தை எடுத்து வந்துள்ளேனா என்றால் சரி. ம.சா.ஆ.2 ல் போதுமான பணம் இல்லை என்று வழக்கு காசோலை திருப்பப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அந்த ஆவணம் எங்களுடைய வங்கியை சேர்ந்தது இல்லை.

2) என்னுடைய ஆவணத்தின் படி இவ்வழக்கு காசோலை Stop Payment செய்யப்பட்டுள்ளதாக இருக்கும் நிலையில் புகார்தாரரின் வங்கி கணக்கின் ரிட்டன் மெமோவில் ம.சா.ஆ.2 ஆவணத்தில் போதுமான பணம் இல்லை என்று திருப்பப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. முதலில் காசோலையை வங்கியில் செலுத்தினால் முதல் சுற்றில் கணினி வழியாக காசோலையின் ஆவணத்தின் உண்மை தன்மை, போதுமான பணம் இருக்கிறதா என்றும், உறுதிப்படுத்திக் கொண்டு இரண்டாவது சுற்றில் Stop Payment கொடுக்கப்பட்டுள்ளதா என்றும் உறுதி செய்யப்படும். முதல் சுற்றில் போதுமான பணம் இல்லை என்று தெரிந்தால் அந்த நிலையிலேயே காசோலை திருப்பப்படும். மேற்படி அனைத்து செயல்களும் தன்னிச்யையான கணினி வழியாக நடக்கும்.

3) இவ்வழக்கு காசோலை போதுமான பணம் இல்லை என்று திருப்பப்பட்டுள்ளதால் ஆஜர் எதிரி கொடுத்த Stop Payment என்ற காரணத்திற்காக திருப்பப்படவில்லை என்றால் எங்களுடைய வங்கியில் ஆஜர் எதிரியின் கணக்கில் போதுமான பணம் இல்லை என்பதால் திருப்பப்பட்டது. எனது வங்கியில் ஆஜர் எதிரியின் வழக்கு காசோலையை Stop Payment செய்தற்கான தகவலை ஆஜர் எதிரிக்கு அனுப்பியுள்ளோம் என்றால் அந்த தேதியில் நான் வங்கியில் இல்லாததால் அதை பற்றி எனக்கு தெரியாது. ஆனால் ஆஜர் எதிரி கேட்டுக் கொண்டால் தான் வங்கி அவ்வாறு கொடுக்கும்.

**மறுவிசாரணை :**

1) ஆஜர் எதிரி Stop Payment கொடுத்து இருந்தாலும் அவருடைய வங்கி கணக்கில் போதுமான பணம் இல்லை என்றால் Funds Insufficient என்ற காரணத்திற்காக தான்

காசோலை திருப்பப்படும் என்றால் சரி, போதுமான பணம் இருந்தால் Stop Payment என்று காசோலை திருப்பப்படும். 25.01.2022 ம் தேதி ஆஜர் எதிரியின் வங்கி கணக்கில் அதிகபட்ச நிலுவைத் தொகை ரூ.20,945.24/-ஆகும்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1) நான் எடுத்து வந்து இருக்கும் ஆவணங்கள் மற்றும் என்னுடைய சாட்சியம் இந்த வழக்கை முடிவு காண்பதற்கான தீர்வாக இல்லை என்றால் சரியல்ல.

விசாரணை முடிந்த நேரம் மதியம் 01.25 மணி.

Sd/S.Sadhamhusain
Judicial Magistrate,
Fast Track Court,
Omalur.